**கெகிராவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரில் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும்விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெகிராவ பிரதேச சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ரூபா, 3,113,988 இற்கான நிலையான இருப்புக்களுக்கான வட்டி வருமானம் நிதிக் கூற்றுக்களின் படி ரூபா. 2,734,982 ஆக குறிப்பிடப் பட்டிருந்ததால் ரூபா. 379,006 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் பணமாகக் கிடைத்த வருமான அடிப்படையில் வைப்பில் இடப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட 02 கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு மைதானத்தின் பெறுமதி ரூபா.29,900,371 மற்றும் அவ் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மரத் தளபாடங்களின் பெறுமதி ரூபா.100,742 என்பன வைப்பில் இடப்படவில்லை. | சொத்துக்களின் பெறுமதி உரிய கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | |

**(ஆ) பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2 வருடங்கள் கடந்த ரூபா.196,087 பெறுமதியான கைத்தொழில்தொழில் துறை கடனானது அறவிடப்படாது இருந்தது. | பெற்றுக் கொள்ளப் பட வேண்டிய வரவுகள் அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ii) | 2 வருடங்கள் கடந்த ரூபா. 1,340,902 பெறுமதியான தொழில் துறை கடனானது அறவிடப்படாது இருந்தது. | பெற்றுக் கொள்ளப் பட வேண்டிய வ அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ரூபா. 417,940 ஐ பெற்றுக் கொள்வதற்கான உரிய வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் ரூபா 556,150 ஐ செலுத்தி தீர்க்க வேண்டுமென விசாரணையில் தீர்ப்பாகியுள்ளது. |
| (iii) | 2 வருடங்கள் கடந்திருந்தும் ரூபா 658,063 ஆன நிர்மாண கடன்கொடுத்மேதார் தொகையானது தீர்க்கப்படாமல் இருந்தது. | செலுத்தப்பட வேண்டிய மீதியை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன் |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 8,139,459 பெறுமதியான கணக்குப் பிரிவுகள் 02 இற்கான விரிவான பட்டோலைகள், மதிப்பீட்டுத் திணைக்கள அறிக்கை | நிதிக்கூற்றுகளில் குறிப்பிட்டுள்ளதன் படி பெறுமதிகளை உறுதிப்படுத்திக் | ஏற்றுக் கொள்கின்றேன். |

| | |
|---|---|
| என்பன முன்வைக்க படாமையால் கணக்கீட்டின் போது அவை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமற் போனது. | கொள்ள அவசியமான எழுத்து மூல சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதி பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி சபையினால் ரூபா. 75,000 தொகையுடைய 18 இருப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்கப்படாமல் இருந்தது. | சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப செயற்படல். | ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 15 வாகனங்களுக்கான எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளியேற்றம் என்பவற்றை உறுதி செய்வதற்கு கைவிரலடையால பதிவு இயந்திரம் பொருத்தப்படாமல் இருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 MK இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் குறித்த வெவ்வேறான ஆவணங்கள் கையாளப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,427,119 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,998,377 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) வீதவரியும் வரியும் | 7,775,156 | 7,811,522 | 6,899,556 | 5,158,524 | 7,242,344 | 7,486,528 | 7,739,205 | 4,246,558 |
| (ii) வாடகை | 7,712,662 | 5,937,287 | 5,899,927 | 302,107 | 8,655,806 | 6,866,960 | 6,891,002 | 264,747 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,501,101 | 4,392,295 | 4,392,295 | - | 3,789,575 | 4,107,975 | 4,107,975 | - |
| (iv) ஏனைய வருமானம் | 30,739,000 | 21,823,589 | 43,069,301 | 49,498,525 | 25,746,640 | 20,791,266 | 73,817,112 | 70,764,237 |
| மொத்தம் | 50,727,919 | 39.964,693 | 60,261,079 | 54,959,156 | 45,434,365 | 39,252,729 | 92,555,294 | 75,275,542 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 75,275,542 பெறுமதியின் 51.23 வீதமான ரூபா 38,543,660 ஐ மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட நடவடிக்கை எடுப்பதுடன் தொடர்தும் நிலுவையை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கான உரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக அறிவிக்கப்படுகின்றது |

**2.2.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31ம் திகதிக்கு காணப்பட்ட நிலுவையான ரூபா. 2,840,375 தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க படி பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. | நிலுவையை அறவிட சட்டத்தின் 158 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31ம் திகதிக்கு ரூபா 1,506,902 ஆன நிலுவையாகவுள்ள கடை வாடகை சம்பந்தமாக 1987 இன் இலக்கம் 15 இற்கான பிரதேச சபை 159ம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 159ம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். 159ம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

**(அ) நீதிமன்றத் தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 45,724,975 கும். | சபைக்கு வருமானம் ஈட்டத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு உப விதிகளை அமைத்து வருமானத்தை ஈட்டல். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஆ) முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முத்திரைப் பணம் ரூபா 3,773,600 கும். | சபைக்கு வருமானம் ஈட்டத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு உப விதிகளை அமைத்து வருமானத்தை ஈட்டல். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைவாக 28 பிரதான காரணங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டு இருக்கவில்லை. | உப விதிகளைப் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். உப விதிகளைப் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ரூபா 863,212 செலவில் கழிவு ஒன்றுதிரட்டும் நிலையமொன்று அமைக்கப்பட்டிருப்பதுடன் 2019 ஜனவரி 31 ஆம் திகதி ரூபா 755,766 பெறுமதியான கம்பக்டர இயந்திரமொன்று கிடைக்கப்பெற்றும் அப் பிரதெசத்தின் கழிவுகள் வேறாக்கப்படாமல் ஹபரன | கழிவு முகாமைத்துவம் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கழிவுகளை ஒன்றுதிரட்டும் மையம் மற்றும் கம்பக்டர் இயந்திரமொன்று புதிய கழிவுகளை முகாமைத்துவ நிகழ்ச்சி நிரலின் போது பாவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. |

செவனகம மற்றும் எம்புல்கஸ்வெவ எனும் பிரதேசங்களில் ஒழுங்கின்றி சூழலுக்கு விடப்பட்டிருந்தது.

**(இ) சூழல் தொடர்பான சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையில் சேர்க்கப்படும் குப்பை கூழங்கள் இரு இடங்களில் ஒழுங்கு முறையின்றி அகற்றப்படாமையினால் பாரியளவவில் சூழல் மாசடைவதோடு பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் தகனம் மூலம் வளி மாசடைகின்றது. அத்துடன் அவற்றை உணவாக உட்கொள்ளும் காட்டு யானைகள் சுகாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளன. | கழிவுகளை அகற்ற உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். திண்மக் கழிவுகள் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிகழ்வு நிகழ இடமளிக்கப்படாதென தெரியப்படுத்தப்படுகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் 2030 பற்றி சபை அறிந்திருக்கவில்லை. | 2030 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு செயற்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சபை அறிவுறுத்தப்பட நடவடிக்கை மேற் கொள்ளப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹபரன நகர சபைக்கு சொந்தமான 05 கடைகள் உப குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. உப குத்தகைக்கு விடல் தடை செய்யப்பட்டு இருப்பதாக ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டு இல்லாததால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. | ஓபபந்தங்களில் உப குத்தகைக்கு விடுவது தடை என்பதும் உப குத்தகைக்கு விடும் போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். உறுதியான கடை வாடகை ஒப்பந்தமொன்றை உருவாக்கி மீண்டும் கடை உரிமையாளர்களுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் அதன்படி உரிய முறையில் |

| | | |
|---|---|---|
| | | நடந்த கொள்ள செயற்பாடுகளை மேற்கொள்வேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் 11 பதவிகளுக்காக 23 பதவியணியினர் குறைவாகக் காணப்பட்ட போதும் அவற்றை நிரப்ப முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணியணியினருக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு சபையின் நிதி மற்றும் முகாமைத்துவம் உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். ஊள்ளூராட்சி மன்ற ஆணையாளர், பிரதான செயலாளர் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழு ஆகிய நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2008 திசம்பர் 31 திகதிய இலக்கம் 30/2008 சுற்றுநிருபத்தின் இரண்டாம் ்பிரிவின் படி உத்தியோகத்தர் ஒருவருக்குரிய கடன் தொகையானது ரூபா 250,000 ஆக மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் 04 உத்தியோகத்தர்கள் கடன் எல்லையை மீறி ரூபா 237,934 மேலதிகமாக கடனாக பெறப்பட்டுள்ளது. | சுற்று நிருபத்தின் படி கடன் எல்லை மீறாதிருப்பதுடன் எல்லை மீறிய கடன்தொகை விரைவாக அறவிடப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2004 ஆம் ஆண்டின் வீதவரியும் வரியும் மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டின் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | முறையான மதிப்பீட்டின் மூலம் வீதவரி அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சொத்து மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடைபெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 597,000 பெறுமதியான 03 டிரக்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிளொன்று பழுது பார்க்கும் நிலையில் இருப்பதுடன் அவை பழுது பார்க்கப்படாமல் சபை வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தன | பாவனைக்கு உட்படுத்தக் கூடிய வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் பழுதுபார்க்க முடியாத வாகனங்கள் அகற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 02 டிரக்டர்கள் பழுதுபார்க்க இயந்திர பொறியியலாளரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். டீரக்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

#### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பயன்படுத்தும் சபைக்கு சொந்தமானவை என பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 31 ஏக்கர் 2 ரூட் 08 பர்ச்சஸ் ஆன 24 காணித் துண்டுகளின் உரித்திதைக் கையேற்க சபை நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. | சுபைக்கு சொந்தமான காணித் துண்டங்களை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சுபைக்கு சொந்தமான காணித் துண்டங்களை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 490,000 பெறுமதியான டிரக்டர் ட்ரெய்லர் மற்றும் நீர் பவுசர் என்பன பதிவு செய்யப்படாமல் பயன்பாட்டில் இருந்தது. | அனைத்து வாகனங்களும் பயன்பாட்டுக்கு முன் பதிவு செய்யப்படல் வேண்டும். | பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது |

#### 3.5.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 மற்றும் 2005 வருடங்களில் ரூபா 2,500,000 செலவில் எம்புல்கஸ்வெவவில் அமைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் செரிமானத் தொட்டி பயன்பாடின்றி காணப்பட்டது. | இயக்கமின்றிக் காணப்படும் சொத்துக்களை உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். சேதன பசளை உருவாக்கத்திற்காக 04 செரிமான தொட்டிகளை பயன்படுத்த திட்டமிப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 9,269,000 பெறுமதியுள்ள 08 கட்டிடங்கள் பாவனைக்கு உபயோகமின்றி இயங்காமல் இருந்தது. | செயற்பாடின்றிக் காணப்படும் சொத்துக்களை உபயோகப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். குறித்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1)(i) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட் டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் மிக விரைவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்த தயார் என் அறிய தருகின்றேன். |